2019 ஜூலை 3]

பாதை அமைத்தல் போன்ற பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, கடந்த காலங்களில் பல கிராமங்களில் கட்டப்பட்டிருக்கின்ற சமுதாயக் கூடங்கள் சிறு சிறு பழுதுகளால் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ளன. எனவே, குறைந்த செலவில் அந்தப் பழுதடைந்த சமுதாயக் கூடங்களையெல்லாம் பழுதுபார்த்து, மக்கள் பயன்பாட்டிற்கு நீங்கள் அர்ப்பணிப்பீர்களேயானால், மக்கள் அனைவரும் பயனடைவார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

குடமுழுக்கு

***7371—திரு. அ. மருதமுத்து:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, ஆறகளூர் கிராமத்திலுள்ள அருள்மிகு காமநாதீஸ்வரர் திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் தங்களையும் வணங்கி எனது விடையினை இம்மன்றத்தில் பதிவு செய்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ஆறகளூர் கிராமத்திலுள்ள அருள்மிகு காமநாதீஸ்வரர் மற்றும் கரிவரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் தற்போது நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மதிப்பீட்டில் wiring பணிகளும், நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அலுவலகம் கட்டும் பணிகளும் முடிவடைந்துள்ளன. மேலும், சுற்றுப் பிரகார மண்டபம் பழுது நீக்கிப் புதுப்பித்தல், சுற்றுப் பிரகாரம் தரைத்தளம் கற்கள் பதிக்கும் பணிகள் மற்றும் திருப்பணிகளுக்கு, ரூ.18.65 இலட்சம் மதிப்பீட்டில் ஆலயப் பணிகளுக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பணி ஆணைகளும் வழங்கப்பட்டு, தற்போது 50 சதவிகிதப் பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் முடிவுற்றதும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு முதலமைச்சரின் மேலான ஒப்புதலுடன், இத்திருக்கோயில் குடமுழுக்கு இந்த நிதியாண்டிற்குள் நடத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்கள்.

திரு. அ. மருதமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் வாழ்ந்து, வங்கக் கடலோரம் உறங்கிக் கொண்டிருக்கும் உன்னதத் தலைவி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். வீரத்தின் விளை நிலமாம், சேலம் மாவட்ட மண்ணுக்குச் சொந்தக்காரர், கொங்குநாடு கொடுத்த

2019 ஜூலை 3]

சொக்கத் தங்கம், சிலுவம்பாளையத்து சிங்கம், குடிமராமத்து மன்னர், காவேரி மீட்பு நாயகர், எங்களது குடும்ப தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆறகளூர், அருள்மிகு காமநாதீஸ்வரர் கோயிலுக்கு குடமுழுக்கு விழா நடத்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான விளக்கத்தையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு சொல்லிவிடுகிறேன்.

கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட காமநாதீஸ்வரர் ஆலயம், புகழ்மிக்க பிரசித்திபெற்ற திருக்கோயில் ஆகும். மேற்படி ஆறகளூரைச் சுற்றி பல கிராமங்கள் உள்ளன. ஒரு நாளைக்கு 20 முதல் 30 திருமணங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாதமும் அஷ்டமி தினத்தன்றும் அஷ்ட பைரவரை தரிசனம் செய்ய பல மாவட்டங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அன்னார் அவர்களும் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு அஷ்ட பைரவரை அஷ்டமி தினத்தன்று வந்து தரிசனம் செய்துள்ளார். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கூட்டத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு, வியந்து பேசினார். எனவே, மேற்படி பெருமைவாய்ந்த கோயிலை புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தலைவாசல் ஒன்றியம், வி. கூட்டுரோடு அருகில் சுமார் 960 ஏக்கர் நிலப்பரப்பில் பண்ணை வளாகமும், கால்நடை ஆராய்ச்சி நிலையமும் அமைக்க

உத்தரவிட்டு, வெகு விரைவில் அடிக்கல் நாட்ட இருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களுக்கும், கால்நடை ஆராய்ச்சி நிலையம் அமைக்க உறுதுணையாக இருந்த மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அன்னார் அவர்களுக்கும் என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இன்னும் ஒரு கேள்விதான் இருக்கிறது. அதையும் கேட்டு முடித்துவிடுகிறேன். கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புளியங்குறிச்சி கிராமத்தில் சக்தி வாய்ந்த பிரசித்தி பெற்ற அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் உள்ளது. மேற்படி திருக்கோயிலில் அந்தக் கிராமத்திலுள்ள சுமார் 6,000 மக்கள் வழிபாடு செய்து வருகிறார்கள். பக்கத்து கிராமத்தைச் சேர்ந்த மக்களும் வந்து வழிபாடு செய்து செல்கின்றனர். மேற்படி கோயிலுக்கு ஒவ்வொரு மாதமும் மாதாந்திர பூஜைகளும், பண்டிகை கால சிறப்பு பூஜைகளும் நடந்து வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் திருவிழா நடந்து வருகிறது. எனவே, மேற்படி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய சேலம் மாவட்டம், புளியங்குறிச்சி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு 2018–2019 ஆம் ஆண்டுக்குரிய கிராம கோயில் புனரமைப்பு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திருப்பணிக்கான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. மதிப்பீடுகளுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டு, திருப்பணிகள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான ஒப்புதலுடன் இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கை விரைவில் நடத்தும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஜூலை 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அவ்வளவுதானே? இன்னும் இருக்கிறதா. (குறுக்கீடு) கேளுங்கள். இரண்டாவது கேள்வி, கேளுங்கள்.*

திரு. அ. மருதமுத்து: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

வினாக்கள்–விடைகள் நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது துறை சார்ந்த கேள்விகளை எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நான் இந்த அவையில் கேள்வி நேரத்தைக் குறைத்துக்கொள்ளலாமா அல்லது கேள்விகளைக் குறைத்துக்கொள்ளலாமா என்று கேட்டதற்கு, தாங்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், "கேள்வி நேரம்தான் மிக முக்கியம். அரசாங்கத்திடமிருந்து பல செய்திகளை உறுப்பினர்கள் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கக்கூடியது கேள்வி நேரம்" என்று சொன்னீர்கள். அந்தக் கருத்து முழுவதும் நியாயமானது; நான் ஏற்றுக்கொள்கிறேன். ஒவ்வொரு துறையைப் பற்றியும் தங்கள் தொகுதிக்குட்பட்ட அல்லது மாநிலம் முழுவதற்குமான கேள்விகளைக் கேட்பதற்கு மன்ற உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. காங்கிரஸ்* period*–லும், அறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலும், அதற்குப்பிறகு வந்த கலைஞர் அவர்கள் காலத்திலும், மாண்புமிகு முதலமைச்சராக எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த காலத்திலும், ஏன் அம்மையார் அவர்கள் முதல்வராக இருந்த காலத்திலும், இந்த அவையில் கேள்வி நேரத்தில் போலீஸ் இலாகா, நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித்துறை ஆகிய 3 இலாகாக்கள் சார்ந்த கேள்விகள் இருந்தே தீரும். நீங்கள் வேண்டுமானால் எடுத்துப் பாருங்கள்.*